**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 224/2021**

**Date : 04.02.2026.**

**வா.சா. 1 – சக்திவேல்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தற்போது எங்கு தாமசம் என்றால் பள்ளிவிளை. நான் கட்டியிருக்கும் வீட்டிற்கு பிளாண் அப்ரூவல் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தை பிரதிவாதி அபகரித்துள்ளார் அதனால். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால் என்னுடன் சேர்த்து நான்கு பேர்கள் இரண்டு பெண்கள் இரண்டு ஆண்கள். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் நியாபகம் இல்லை. எனது வீட்டிற்கு அருகில் தான் எனது அண்ணன் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் இருக்கும் இடம் எனது அண்ணன் வசிக்கும் இடம் மற்றும் எனது தகப்பனார் விற்ற இடம் மொத்தம் எத்தனை சென்ட் என்றால் 7½ சென்ட் . மேற்படி 7½ சென்ட் என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 எனது தந்தை பாகம் செய்ததாக குறிப்பிடப்பட்டது என்றால் சரியல்ல எனது தாயார் தான் பாகம் செய்து கொடுத்தார். எனது தந்தை எப்போது காலஞ்சென்றார் என்றால் 07.07.2022. எனது தகப்பனார் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாரிசுசான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு உரிமைப்பட்ட 3¾ சென்ட் எதன்படி உரிமைப்பட்டது என்பதை

காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1ல்மேற்படி விபரம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல பக்கம் 9 ல் 1.875 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தந்தை 7½ சென்ட்டில் 3¾ சென்ட்டை எனது தந்தை இறப்பதற்கு முன்பே விற்று விட்டார் என்றால் சரிதான். அப்போது எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 10 வயது. எனது தந்தை எப்போது காலஞ்சென்றார் என்றால் 24 ஆண்டுகள் ஆகிறது. பிரதிவாதிகள் 3¾ சென்ட்டை வாங்கியதிலிருந்து தற்போது வரை கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.